# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 23/மா/2023**
**நாள் : 25.02.2023**

திரு. G.M. சங்கர்,
சென்னை – 600 091. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் -14, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் என்பவரின் 24.01.2023 நாளிட்ட மனு 30.01.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 23/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், லெஷ்மி நகர் பிரதான சாலை, எண்.57B என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.M. சங்கர் தனது முறையீட்டு மனுவில்,

"கடந்த 10.05.2018, 07.05.2019, 12.07.2021 மற்றும் 28.11.2022 தேதிகளில் மேற்படி சென்னை பெருநகர மாநகராட்சியின் வார்டு 188, மடிப்பாக்கம் தெரு மற்றும் சாலை பெயர்கள் அடங்கிய Sign Board உடனடியாக அமைத்துத் தர வேண்டி மனு அளித்திருந்தேன். எனது மனுவின் அடிப்படையில் 2020-2021 நிதியாண்டில் அனைத்து சாலைகளின் தெரு பெயர் பலகை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கடந்த 11 வருடங்களாக வரி கட்டிய மக்களை ஏமாற்றி அந்த வசதியை ஏற்படுத்தி தராமல் சென்னை மாநகராட்சி பணிகள் துறை மற்றும் சென்னை மாநகராட்சி மண்டலம் 14 நிர்வாகம் மக்கள் வரிப்பணத்தில் ஊழல் செய்துள்ளது கடும் கண்டனத்திற்குரியது. ஏற்கனவே மடிப்பாக்கம் அண்ணா நகரில் Sign Boards வைத்துவிட்டதாக பொய்யாக ஒப்பந்ததாரர் கணக்கு காட்டியுள்ளது RTI மூலமாக தகவல் பெறப்பட்டுள்ளது. ஆனால் அந்த இடத்தில் பெயர்ப்பலகைகள்

வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் குறிப்பாக 2022-2023 நிதியாண்டில் ரூ.8.43 கோடியில் டிஜிட்டல் பெயர்ப்பலகை அஞ்சல் குறியீடு, மண்டலம், வார்டு எண் குறிப்பிட்டு வைக்க உள்ளதாக மேயரின் வரவு செலவு திட்ட அறிவிப்பில் உள்ளது. எனது மனுவின் அடிப்படையில் இன்றைய நாளதுவரை எங்களது பகுதிக்கு செயல்பாட்டிற்கு வரவே இல்லை. நம்ம சென்னை செயலி மூலமாகவும், நேரிலும், கடிதம் மூலமாகவும் பலமுறை கோரிக்கை வைத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் மேற்படி பணிகளில் ஊழல் செய்த, கடமையை செய்யத்தவறிய அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

ஆகையால் உடனடியாக எனது மனுவின் அடிப்படையில் தக்க அலுவலர்களை விசாரணைக்கு உட்படுத்தி Sign Boards அமைத்துத்தர ஆவன செய்யுமாறும், கடமையை செய்யத் தவறிய, ஊழல் செய்த அலுவலர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறும் தங்களை ஆம் ஆத்மி கட்சி சார்பாக தங்களை பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் - 14, உதவி ஆணையரிடம் கோரப்பட்டது அவர் தனது 13.02.2023 நாளிட்ட அறிக்கையில்:**

மனுதாரரின் கோரிக்கை குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிப்பது யாதெனில் பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து மண்டலங்களிலும் உள்ள உட்புறச்சாலைகளுக்கு தெரு பெயர் பலகை வைப்பதற்கு உண்டான மதிப்பீடு மற்றும் ஒப்பம் ஆகியவை தலைமையிடத்தில் உள்ள பேருந்து சாலைகள் துறை மூலமாக மேற்கொள்ளப்படவுள்ளது. அதனடிப்படையில் மண்டலம் - 14ல் உட்புறச்சாலைகளில் தெரு பெயர் பலகை இல்லா சாலைகளின் பட்டியலை பேருந்து சாலைகள் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பேருந்து சாலைகள் துறை மூலமாக ஒப்பம் கோரப்பட்டு ஆணை பணி வழங்கியபின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மனுதாரர் மடிப்பாக்கம் அண்ணா நகரில் Sign Boards வைத்துவிட்டதாக பொய்யான ஒப்பந்ததாரர் கணக்கு காட்டியுள்ளது தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005 மூலமாக தகவல் பெறப்பட்டுள்ளதாகவும் ஆனால் அந்த இடத்தில் பெயர்ப்பலகைகள் வைக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து தெரிவித்துக்கொள்வது யாதெனில், கோட்டம் 188 மடிப்பாக்கத்தில் உள்ள அண்ணா நகர் பகுதியில் தெரு பெயர்ப்பலகை (Street Name Board) அமைக்கப்பட்டதாக மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005 (RTI Act 2005) மூலமாக வழங்கப்பட்ட தகவல் அறிக்கையில் 02.08.2016–ஆம் ஆண்டு ஒப்பந்ததாரர் திருவாளர் பார்வதி அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணி சம்மந்தமாக முழுமையான ஒப்பந்த கோப்பு பகுதி கணக்கு குழுமத்தில் உள்ளதால் அவ்வலுவலகத்திலிருந்து கோப்பு பெறப்பட்டு விளக்கம் சமர்ப்பிக்க கால அவகாசம் அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் 2022-2023 நிதியாண்டில் ரூ.8.43 கோடியில் டிஜிட்டல் பெயர்ப்பலகை அஞ்சல் குறியீடு, மண்டலம் வார்டு எண் குறிப்பிட்டு வைக்க உள்ளதாக மேயரின் வரவு செலவு திட்ட அறிவிப்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளவாறு விவரம் கோருவதற்காக தலைமையிடத்து பேருந்து சாலைகள் துறைக்கு 11.02.2023 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவரம் பெறப்பட்டவுடன் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 13.02.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 01.2.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 13.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

“சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம்–14, மடிப்பாக்கம், 188வது வார்டு பகுதியில் உள்ள லட்சுமி நகர், ராஜலட்சுமி நகர், ராஜராஜேஸ்வரி நகர், என்பீல்டு அவென்யூ, அண்ணா நகர், ஜே.வி. நகர், கிருஷ்ணா நகர், சிகாமணி நகர், மீனாட்சி நகர், கிருஷ்ணவேணியம்மாள் நகர், சாரதி நகர், கற்பகாம்பாள் நகர் ஆகிய பகுதிகளில் தெரு மற்றும் சாலை பெயர் அடங்கிய பெயர் பலகை (Sign Board) வைக்குமாறு கோரி 10.05.2018, 07.05.2019, 12.07.2021 மற்றும் 28.11.2022 ஆகிய தேதிகளில் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்–14 அலுவலர்களுக்கு மனு அளித்திருந்தேன். எனது மனுவின் அடிப்படையில் 2020–2021 நிதி ஆண்டில் அனைத்து சாலைகளின் தெரு பெயர் பலகை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–14 அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுகாறும் பெயர்பலகைகள் (Sign Boards) வைக்கப்படவில்லை. மேலும், குறிப்பாக 2022–2023 நிதியாண்டில் ரூ.8.43 கோடி மதிப்பீட்டில் டிஜிட்டல் பெயர்ப்பலகை அஞ்சல் குறியீடு, மண்டலம், வார்டு எண் குறிப்பிட்டு வைக்க உள்ளதாக பெருநகர சென்னை மாநகராட்சி வரவு செலவு திட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுநாள் வரை எங்களது பகுதிக்கு பெயர்ப்பலகைகள் வைக்கப்படவில்லை. எனவே என் மனு மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–14 அலுவலர்கள் மீது உரிய துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் 27.01.2023 தேதியிட்ட எனது புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களை எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -14, உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் 13.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :**

இப்பொருள் குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து மண்டலங்களில் உள்ள உட்புறச்சாலைகளுக்கு தெரு பெயர்ப்பலகை வைப்பதற்கு உண்டான மதிப்பீடு மற்றும் ஒப்பம் ஆகியவை தலைமையிடத்தில் உள்ள பேருந்து சாலைகள் துறை மூலமாக மேற்கொள்ளப்படவுள்ளதால் மண்டலம்–14ல் உள்ள உட்புறச்சாலைகளின் தெருப்பெயர்பலகை இல்லா சாலைகளின் பட்டியலை பேருந்து சாலைகள் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அத்துறை ஒப்பம் வழங்கிய பின்பு பணி ஆணை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மனுதாரர் மடிப்பாக்கம் அண்ணா நகரில் Sign Board வைத்துவிட்டதாக பொய்யாக ஒப்பந்ததாரர் கணக்கு காட்டியுள்ளது குறித்து அப்பணி சம்மந்தமாக முழுமையான ஒப்பந்தக்கோப்பு பகுதி கணக்கு குழுமத்தில் உள்ளதால் அவ்வலுவலகத்திலிருந்து கோப்பு பெறப்பட்டு விளக்கம் சமர்ப்பிக்க கால அவகாசம் அளிக்குமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் 2022–2023 நிதியாண்டில் ரூ.8.43 கோடியில் டிஜிட்டல் பெயர்ப்பலகை அஞ்சல் குறியீடு, மண்டலம், வார்டு எண் ஆகியவை வரவு செலவு திட்டத்தில் குறிப்பிட்டுள்ளது குறித்து அவ்விவரம் கோரி தலைமையிடத்து பேருந்து சாலைகள் துறைக்கு 11.02.2023 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. விவரம் பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறையின் கண்காணிப்புப் பொறியாளரை நேரடி விசாரணைக்கு வருமாறு 13.2.2023 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. அவர் 14.2.2023 அன்று விசாரணைக்கு நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் பெயர் பலகை வைப்பது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மண்டல அலுவலர்களால் உரிய நிதி ஒதுக்கீடு, உரிய நிர்வாக ஒதுக்கீடு, உரிய அலுவலர்களிடம் ஒப்புதல் பெற்று (ம) ஆணையர் அவர்களின் உத்திரவின் பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. எனவே மேற்கண்ட மண்டலம் 14லிருந்து அம்மண்டலத்திற்குட்பட்ட தெருக்களின் பெயர் பலகைகள் வைப்பது தொடர்பாக கருத்துரு ஏதும் மாநகராட்சி அலுவலகத்தால் பெறப்பட்டிருப்பின் மாநகராட்சி தலைமை அலுவலகத்தால் அதனை ஆய்வு செய்து அப்பகுதியில் பெயர் பலகைகள் வைத்திட ஆணையர் அறிவுறுத்தலின்படி செய்யப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி உதவி செயற் பொறியாளர், உதவிப் பொறியாளர் வாக்குமூலம் மற்றும் அறிக்கை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள் துறை கண்காணிப்பு பொறியாளரின் வாக்குமூலம், ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர், பெருநகர சென்னை மாநகராட்சியின் 188, வார்டு பகுதியில் அமைந்துள்ள நகர்களில் தெரு மற்றும் சாலை பெயர்கள் அடங்கிய Sign Boards அமைக்க கோரியும் அவ்வாறு அமைக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டவாறு பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–14ல் மடிப்பாக்கம், 188வது வார்டில் உள்ள நகரில் தெரு மற்றும் சாலை பெயர்கள் அமைக்கப்படவில்லையென, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–14ன் உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் செயற்பொறியாளரின் அறிக்கை ஆகியவற்றின் மூலம் தெரியவருகிறது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

<u>பிரிவு " 7 " The Ombudsman shall perform all or any of the following functions, namely –</u>

7 (c) <u>where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும்,</u>

இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது:

மனுதாரர் மடிப்பாக்கம் வார்டு 188 பகுதியில் அமைந்துள்ள 12 நகர்களில் தெரு மற்றும் சாலை பெயர்கள் அமைக்க, மண்டலம்-14லிருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கருத்துரு பெறப்பட்டிருப்பின், மாநகராட்சி தலைமை அலுவலகத்தினர் அதனை ஆய்வு செய்தபின், அப்பகுதியில் பெயர் பலகைகள் வைத்திட ஆணையர் அறிவுறுத்தலின்படி ஆவன செய்யப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறையின் கண்காணிப்புப் பொறியாளர் வாக்குமூலம் அளித்துள்ள நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்திலும், செயற்பொறியாளரின் அறிக்கையிலும், மண்டலம் -14ல் உட்புறச் சாலைகளில் தெரு பெயர் பலகை இல்லா சாலைகளின் பட்டியலை, இம்முறைமன்றம் விசாரணைக்கு தேதி குறிப்பிடப்பட்ட பின் 11.02.2023 அன்று பேருந்து சாலைகள் துறைக்கு அனுப்பி இருப்பது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும். மேலும், 2022-2023 நிதியாண்டில் ரூ.8.43 கோடியில் டிஜிட்டல் பெயர்பலகை அஞ்சல் குறியீடு, மண்டலம் வார்டு எனக் குறிப்பிட்டு வைக்க உள்ளதாக மேயரின் வரவு-செலவுத் திட்ட அறிவிப்பு குறித்து பேருந்து சாலைகள் துறைக்கு, 11.2.2023 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14ன் செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார். பெருநகர சென்னை மாநகராட்சி பேருந்து சாலைகள் துறையின், கண்காணிப்புப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில், பெறப்படும் பெயர்பலகை குறித்த கருத்துருக்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையகத்தில் உள்ள உரிய அலுவலர்களின் ஒப்புதல் பெற்றும் ஆணையரின் அறிவுறுத்தலின்படியும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ள சூழ்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14ன் செயற் பொறியாளர், பேருந்து சாலைத் துறைக்கு மேற்கண்ட கடிதம் அனுப்பியது இம்முறை மன்றத்தின் கவனத்தை திசை திருப்புவதாக உள்ளது என இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மண்டல அலுவலகத்திலிருந்து ஒரு கருத்துரு பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிடத்திற்கு அனுப்பும்போது, அக்கருத்துரு பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிடத்தில் எவ்வாறு பரிசீலனை செய்யப்படுகிறது என்ற விவரம் தெரியாத நிலையில் மண்டலம் - 14 அலுவலர்கள் பணிபுரிவது தங்கள் பணியில் உள்ளார்ந்த ஈடுபாடு இல்லையென்றே இம்முறைமன்றம் கருத வேண்டியுள்ளது. இப்பொருள் குறித்து

தலைமைப் பொறியாளர்/கண்காணிப்புப் பொறியாளர் அளவில் முறையாக ஆய்வு செய்யாதது குறித்து இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது.

மேற்கண்டச் சூழ்நிலையில், இம்முறைமன்றத்தின் கவனத்தை திசைதிருப்பும் விதமாக தகவல் அளித்த பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 14ன் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறையின் தலைமையிடத்து கண்காணிப்புப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மனுதாரர் குறிப்பிட்ட மடிப்பாக்கம், வார்டு 188ல் உள்ள நகர்களில், தெரு மற்றும் சாலை பெயர்கள் அமைக்க, உரிய நிதி ஒதுக்கீடு, உரிய நிர்வாக ஒதுக்கீடு மற்றும் உரிய ஒப்புதல் பெற்று மண்டலம்-14ன் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிடத்திற்கு அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கை, மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மடிப்பாக்கம் அண்ணாநகரில் Sign Board வைத்துவிட்டதாக பொய்யான ஒப்பந்தகாரர் கணக்கு காட்டியுள்ளது குறித்து, அப்பணி சம்பந்தமான முழுமையான கோப்பு பகுதி கணக்கு குழுமத்தில் உள்ளதால், அவ்வலுவலகத்திலிருந்து கோப்பு பெறப்பட்டு விளக்கம் சமர்ப்பிக்க கால அவகாசம் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதால், இது தொடர்பான விரிவான அறிக்கையினையும், இம்முறைமன்றத்திற்கு அனுப்புமாறும், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-14ன் உதவி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Greater Chennai Corporation is directed to erect sign boards in the Madippakkam area wards especially in ward No.188, as requested by the petitioner at the earliest as it has been alleged that for the last 11 years no work has been executed under the sign board erection category despite the fervent pleas by the local people. The explanation and excuse offered by the Zonal Officials are rejected as face saving .evasive and non committal. The wrong reply furnished by the Zonal Officials to the petitioner is censured that betrays the indifference, lethargy, and slackness of the officers concerned. The Department of Bus Route Roads in the Corporation Head Quarters is directed to check up the status of erection of sign boards in Madippakkam area and other zones in general. The Forum is at a loss to understand why this subject is being dealt with in a cavalier and absolutely careless manner by the Department in charge of the portfolio. When there is a clear Budgetary provision for this sign board erection programme it is beyond ones comprehension as to why the Department in charge of the subject is so insensitive and stony to the request of the area citizens. The Chief of the Officer in charge of the subject should be pulled up by the Commissioner of Greater Chennai Corporation for this lack of supervision and non delivery of a basic service to the area people. All technical formalities like tender should be completed within a period of 3 months and the sign boards should be erected with no further delay. Government in MAWS Department is being apprised of this state of affairs prevailing in the Madipakkam zone for information and further necessary directions to the Greater Chennai Corporation to

avoid recurrence of non-erection in the other zones of the Corporation limits to add another feather in the cap of the Greater Chennai Corporation administration.

2023–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. G.M. சங்கர்,
எண்.57B, லஷ்மி நகர் பிரதான சாலை,
மடிப்பாக்கம், சென்னை – 600 091.

2) கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

3) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4) துணை ஆணையர், (பணிகள்)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
*He is requested to ensure the implementation of this order*

5) உதவி ஆணையர்,
மண்டலம் - 14, பெருநகர சென்னை மாநகராட்சி,
6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,
சென்னை – 600 091.

6) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

01/03/23

செயலாளர்

1/3/23

2/3

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032